

சென்னை கிண்டி சிறுவர் இயற்கை பூங்காவில் வனத்துறை சார்பில் வன உயிரின வார விழாவின் துவக்க விழாவினை வனத்துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி தொடங்கி வைத்து வன உயிரின வார விழா விழிப்புணர்வு தொடர்பான கையேடுகளை வெளியிட்டார். இவ்விழாவில் சுற்றுச்சூழல் காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை அரசு முதன்மைச் செயலாளர் முனைவர் ப. செந்தில் குமார், முதன்மை தலைமை வனப் பாதுகாவலர் வனத்துறை தலைவர் சீனிவாஸ் ரா ரெட்டி மண்டல குழு தலைவர் இரா. துரைராஜ், அறிஞர் அண்ணா உயிரியல் பூங்கா கூடுதல் முதன்மை தலைமை வனப் பாதுகாவலர் மற்றும் இயக்குநர் ஆஷிஸ் குமார் ஸ்ரீ வத்ஸவா வன உயிரின காப்பாளர் மணிஷ் மீனா மற்றும் முதன்மை தலைமை வனப் பாதுகாவலர்கள், அரசு உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

## தொடர் விடுமுறையை முன்னிட்டு 9, 10 தேதிகளில் 1,175 சிறப்பு பேருந்துகள்!

சென்னை, அக். 6–

ஆயுத பூஜை மற்றும் தொடர் விடுமுறையை முன்னிட்டு அக்.9 மற்றும் 10 ஆகிய நாட்களில் சென்னையிலிருந்தும் மற்றும் பிற இடங்களிலிருந்தும் கூடுதலான பயணிகள் தமிழகம் முழுவதும் பயணம் மேற்கொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுவதால் கூடுதலாக சிறப்பு பேருந்துகளை இயக்க போக்குவரத்துத் துறை திட்டமிடப்பட்டுள்ளது.

இதன்படி, சென்னை கிளாம்பாக்கத்திலிருந்து திருவண்ணாமலை, திருச்சி, கும்பகோணம், மதுரை, திருநெல்வேலி, நாகர்கோவில், கன்னியாகுமரி, தூத்துக்குடி, கோயம்புத்தூர், சேலம், ஈரோடு, திருப்பூர் ஆகிய இடங்களுக்கு அக்.9ம் தேதி புதன்கிழமை அன்று 225 பேருந்துகளும், அக்.10ம் தேதி (வியாழக்கிழமை) அன்று 880 சிறப்பு பேருந்துகளும் இயக்க திட்டமிடப்பட்டுள்ளது. சென்னை கோயம்பேட்டிலிருந்து திருவண்ணாமலை, நாகை, ஆகிய இடங்களுக்கு அக்.9ம் தேதி 35 பேருந்துகளும் அக்.10ம் தேதி 265 பேருந்துகளும் மேற்கூறிய இடங்களிலிருந்தும் இயக்க திட்டமிடப்பட்டுள்ளது மற்றும் பெங்களூரு, திருப்பூர் ஆகிய இடங்களிலிருந்தும் பல்வேறு இடங்களுக்கும் 200 சிறப்பு பேருந்துகளும் இயக்க திட்டமிடப்பட்டுள்ளது. மாதவரத்திலிருந்து அக்.9 மற்றும் 10 ஆகிய நாட்களுக்கு 110 சிறப்பு பேருந்துகளும் இயக்கப்படுகிறது.



சுற்றுலாத்துறை அமைச்சராக இரா.இராஜேந்திரன் பொறுப்பேற்று நேற்று முன்தினம் (04.10.2024) சேலம் மாவட்டத்திற்கு வருகை தந்ததையொட்டி முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்கள். உடன் சேலம் மாநகராட்சி மேயர் ஆ.இராமச்சந்திரன், சேலம் நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.செல்வகணபதி, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர். சிவலிங்கம் உள்ளிட்ட உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் உள்ளனர்.

### மண்ணச்சநல்லூர் – முசிறி ஒன்றியங்களைச் சேர்ந்த

## 1680 பயனாளிகளுக்கு ரூ.24.63 கோடி நல உதவிகள்!

### அமைச்சர் கே.என்.நேரு வழங்கினார்!

திருச்சி, அக். 6 -

திருச்சி மாவட்டம் மண்ணச்சநல்லூர் மற்றும் முசிறி ஒன்றியங்களைச் சார்ந்த கூடப்பள்ளி மற்றும் 97 ஊரக குடியிருப்புகளுக்கு ரூபாய் 73.97 கோடி மதிப்பீட்டில் தமிழக அரசால் நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டு தற்போது அனைத்து பணிகளும் முடிவுற்று உள்ளது. இந்த திட்டம் ஜல்ஜீவன் மிஷின் திட்டத்தின் மூலம் திருச்சி மாவட்டம் மண்ணச்சநல்லூர் ஒன்றியத்தில் 24 ஊராட்சிகளை சார்ந்த 87 குடியிருப்புகள் மற்றும் முசிறி ஒன்றியத்தில் 6 ஊராட்சிகளை சார்ந்த 11 குடியிருப்புகள் என மொத்தம் 1,14,500 மக்கள் பயன்பெறும் வகையில் இந்த திட்டம் முடிக்கப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்தின் மூலம் பொதுமக்களுக்கு நாள் ஒன்றுக்கு ஒரு நபருக்கு 55 லிட்டர் வீதம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

இந்தத் திட்டத்தை நகராட்சி நிர்வாக துறை அமைச்சர் கே.என்.நேரு பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வந்தார்.

இதனைத் தொடர்ந்து கலைஞரின் கனவு இல்லம் திட்டம், வருவாய் மற்றும் பேரிடர் வேளாண்மை துறைக்கு நலத்திட்ட உதவிகள், சுய உதவி குழுக்களுக்கு வங்கி கடன், தூய்மை பணியாளர்களுக்கான வீடு கட்டும் ஆணை, என மொத்தம் 1680 பயனாளிகளுக்கு ரூபாய் 24.63 கோடி மதிப்பீட்டில் அரசின் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டன.

இவ்விழாவில் அமைச்சர் கே.என்.நேரு பேசுகையில் தெரிவித்ததாவது:

1972ம் ஆண்டு கலைஞர் முதல்வராக இருந்த போது குடிநீர் வழங்கல் திட்டம் செயல்படுத்தப்பட்டது. நீரை சுத்திகரிப்பு செய்து வழங்கும் திட்டமும் கலைஞர் துவங்கி வைத்தார்.

தமிழகம் முழுவதும் இந்த திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. திருச்சி, மதுரை, விருதுநகர், திண்டுக்கல், கரூர் உள்ளிட்ட பல்வேறு பகுதியில் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தமிழக முதல்வர் பார்த்து வந்த துறை என்பதால் நிதி அதிகமாக வழங்கி உள்ளார். 4.4 கோடி மக்களுக்கு வழங்கப்பட்டு உள்ளது. கூட்டு குடிநீர் திட்டம் மூலம் 2008 mlt லிட்டர் 5 கோடி பேருக்கு வழங்கப்பட்டு உள்ளது.

3 ஆண்டு காலத்தில் 3.75 கோடி மக்களுக்கு இந்த குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

குடிநீர் போர் போடும் போது நிலத்தடி நீர் குறையும் என்று மக்களால் நிறைய பிரச்சினைகள் வருகிறது. அதையும் எதிர்கொண்டு வருகிறோம்.

ஜல்ஜீவன் திட்டத்துக்கு 1000 கோடி தேவை என்றால், 800 கோடி தமிழக முதல்வர் தான் கொடுக்கிறார்கள்.

ஒன்றிய அரசு 100, 200 கோடி தான் கொடுக்கிறது. 2024-25க்குள் கூட்டு குடிநீர் திட்டம் மூலம் 7.5 கோடி பேருக்கு குடிநீர் வழங்கப்படும்.

குளித்தலை, மருங்காபுரி பகுதியில் 1000 கோடியில் கூட்டு குடிநீர் திட்டம் நடைபெறுகிறது.

1கோடியே 16 லட்சம் பேருக்கு மகளிர் உரிமைத் தொகை வழங்கப்பட்டு உள்ளது. காலை உணவு திட்டம்,இலவச பேருந்து என பல திட்டங்கள் தமிழக முதல்வர் கொடுத்து உள்ளார்.

புதிய பேருந்து முனையம் உள்ளிட்ட பல்வேறு பணிகளுக்கு திருச்சிக்கு 4,000 கோடி ரூபாய் தமிழக முதல்வர் கொடுத்துள்ளார்.

15 மாநகராட்சியாக இருந்தது, தற்போது 25 மாநகராட்சியாக உயர்த்தப்பட்டு உள்ளது.

இவ்வாறு அமைச்சர் கே.என்.நேரு பேசினார்.

இந்த விழாவில் பெரம்பலூர் நாடாளுமன்ற உறுப்பினர் அருண் நேரு, சட்டமன்ற உறுப்பினர்கள் காடுவெட்டி தியாகராஜன் ஸ்டாலின் குமார் சௌந்தர பாண்டியன் கதிரவன் திருச்சி மாவட்ட ஆட்சித் தலைவர் பிரதீப் குமார் திருச்சி மாநகராட்சி மேயர் அன்பழகன் திருச்சி மாவட்ட வருவாய் அலுவலர் ராஜலட்சுமி, தலைவர் ஹேமலதா சீனிவாச பெருமாள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். ஆயிரக்கணக்கான மக்கள் கூட்டத்தில் கலந்து கொண்டு நலத்திட்ட உதவிகளை பெற்றனர்.

### கூடலூர் தொகுதியில் இன்று

## ஆ.ராசாஎம்.பி.-வாக்காளர்களுக்குநன்றிதெரிவிக்கிறார்!

### மாவட்டச் செயலாளர் பா.மு.முபாரக் அறிவிப்பு!

உதகை, அக்.6-

நீலகிரி நாடாளுமன்றத் தொகுதி உறுப்பினர் ஆ. ராசா இன்று (6.10.2024) கூடலூர் சட்டமன்றத் தொகுதி வாக்காளர்களைச் சந்தித்து நன்றி தெரிவிக்கிறார்.

இது குறித்து மாவட்டக் கழகச் செயலாளர் பா.மு.முபாரக் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

ஓவேலி பேரூர் கழக பகுதிகளில் வாக்காளர்களுக்கு நன்றி தெரிவித்தல்.

- மதியம் 2.00 மணி : உதகையிலிருந்து கூடலூர் புறப்படுதல்.
- மதியம் 3.00 மணி : பெரியசூண்டி
- மதியம் 3.30 மணி : பெரியார் நகர்
- மதியம் 3.45 மணி : பார்வுட்
- மாலை 4.00 மணி : கிளவன்ஸ்
- மாலை 4.15 மணி : சீபுரம்
- மாலை 4.30 மணி : எல்லமலை
- மாலை 5.00 மணி : ஆரோட்டுப்பாறை
- மாலை 5.15 மணி : பாரதிநகர்

மேற்கண்ட நிகழ்ச்சிகளில் கழக நிர்வாகிகள் - செயல்வீரர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், பொதுமக்கள், வியாபாரிகள் உள்ளிட்ட அனைவரும் தவறாது கலந்து சிறப்பிக்க வேண்டுவதோடு, நிகழ்ச்சிகள் சிறப்புடன் நடைபெற தேவையான ஏற்பாடுகளை ஒன்றிய - பேரூர் கழக செயலாளர்கள் சிறப்புடன் செய்திட வேண்டுகிறேன்.

இவ்வாறு பா.மு. முபாரக் தமது அறிக்கையில் கூறியுள்ளார்.

### கோலியனூர் ஒன்றியத்தில்

## கழகக் கொடியேற்று விழாக்கள்!

### மாவட்டக் கழகப் பொறுப்பாளர் டாக்டர் பொன். கௌதமசிகாமணி பங்கேற்பு!

விழுப்புரம், அக். 6 -

விழுப்புரம் தெற்கு மாவட்டம் கோலியனூர் தெற்கு ஒன்றியம் வி அரியலூர் மற்றும் பில்லூர் ஆகிய ஊராட்சிகளில் ஒன்றிய செயலாளர் தே.முருகவேல் தலைமையில் நடைபெற்ற முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழா மற்றும் கழக பவள விழாவை முன்னிட்டு விழுப்புரம் தெற்கு மாவட்டச் செயலாளர் டாக்டர். பொன்கௌதமசிகாமணி அவர்கள் கலந்துகொண்டு கழகக் கொடியேற்றி நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் இரா.இலட்சுமணன், மாவட்ட ஊராட்சி குழு தலைவர் ம.ஜெயசந்திரன், மாவட்டப் பொருளாளர் இரா.ஜனகராஜ், மாவட்ட துணை செயலாளர் தயா.இளந்திரையன், ஒன்றிய செயலாளர்கள் க.மும்மூர்த்தி, கல்பட்டு வி.இராஜா, ஒன்றிய குழுத் தலைவர் சச்சிதானந்தம், துணைத் தலைவர் உதயகுமார், ஒன்றிய நிர்வாகிகள் மாவட்ட பிரதிநிதி சி.எம். எஸ். க.முருகன், தேவகிருஷ்ணன், எம்.கே.ஆர்.காசிநாதன், கலியமூர்த்தி, சடகோபன், மாவட்டக் கவுன்சிலர்கள் வனிதா அரிராமன், கேசவன், ஒன்றிய குழு உறுப்பினர் ஆதிலட்சுமி காசிநாதன், நகர பொருளாளர் இளங்கோ,

மாவட்ட இளைஞர் அணி செ.தினகரன், மாவட்டப் பொறியாளர் அணி அமைப்பாளர் புகழ்.செல்வகுமார், மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி ப.அன்பரசு, S. பாலாஜி, வர்த்தக அணி கோல்டு வெங்கடேசன், தொழிலாளர் அணி சுரேஷ் பாபு, விளையாட்டு மேம்பாட்டு அணி ஆர்.பி.பரத், வேலுசாமி, பரமசிவம், துரைராஜ்,

சாம்ராஜ், ராம்ராஜ், ராஜசேகர் , வினோத், சக்திவேல், ராஜ்குமார், பில்லூர் ஜெனார்த்தனன், வீரபத்திரன், மணிவண்ணன், விநாயகம், மகாதேவன், மணிகண்டன், பழனி, செல்வகுமார், அஜந்தா ரவி, கலிவரதன், நாராயணசாமி,' சுந்தர், ஜனார்த்தனன், முத்துக்குமார், சந்திரலேகா நீதிமன்னன், பாலஜோதி, சித்ரசேனன், சசிகுமார், பூராசாமி, டேவிட் குமார், சுப்ரமணி, முரசொலி, கனிஷ்கர், கௌதமன், வடிவ நாதன், கலியமூர்த்தி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

### நாமக்கல் மேற்கு மாவட்டம்

## பரமத்தி வேலூர் சட்டமன்றத் தொகுதி ஆலோசனைக் கூட்டம்!

### மாவட்டக் கழகச் செயலாளர் எஸ்.எம்.மதுரா செந்தில் அறிக்கை!

சென்னை, அக்.6-

நாமக்கல் மேற்கு மாவட்டம், பரமத்தி வேலூர் சட்டமன்றத் தொகுதி ஆலோசனைக் கூட்டம் குறித்து மாவட்டச் செயலாளர் எஸ்.எம்.மதுரா செந்தில் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

நாமக்கல் மேற்கு மாவட்டத்திற்குட்பட்ட பரமத்தி வேலூர் சட்டமன்ற தொகுதி ஆலோசனக் கூட்டம் இன்று (06.10.2024 - ஞாயிற்றுக்கிழமை) காலை 10.00 மணியளவில் வேலூர், பரமத்திவேலூர் தொகுதி கழக அலுவலகம் கலைஞர் அரங்கில் நடைபெறவுள்ளது.



இக்கூட்டத்தில் பரமத்தி வேலூர் தொகுதிக்குட்பட்ட மாவட்ட, ஒன்றிய, பேரூர் சார்பு அணி தலைவர்கள், துணைத் தலைவர்கள், அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் மற்றும் ஒன்றிய, பேரூர் தகவல் தொழில்நுட்ப அணி நிர்வாகிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ள வேண்டும் என கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு மாவட்டச் செயலாளர் எஸ்.எம்.மதுரா செந்தில் தெரிவித்துள்ளார்.



புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி ஊராட்சி ஒன்றியம், வல்லவாரி மேற்கு ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில், புதிதாக கட்டப்படவுள்ள இரண்டு வகுப்பறையுடன் கூடிய பள்ளி கட்டடப் பணியினை, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் நேற்று முன்தினம் (04.10.2024) அடிக்கல்நாட்டி துவக்கி வைத்தார். உடன் மாவட்ட வருவாய் அலுவலர் அ.கோ.ராஜராஜன், அறந்தாங்கி வருவாய் கோட்டாட்சியர் ச.சிவக்குமார், அறந்தாங்கி ஒன்றியக்குழுத் தலைவர் திருமதி.மகேஸ்வரி சண்முகநாதன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.



உதயநிதி ஸ்டாலின் அவர்கள் துணை முதலமைச்சராகப் பதவி ஏற்றதை கொண்டாடும் வகையில் கோட்டை பகுதி கழகத்தின் சார்பில் மாமன்ற உறுப்பினர் இரா.ஜெயந்தி ராமச்சந்திரன் தலைமையில் கோட்டை பகுதி கழக செயலாளர் பொ.இராமச்சந்திரன் முன்னிலையில் மாநகர கழக செயலாளர் மு.சுப்ரமணியம் பொதுமக்களுக்கு இனிப்புகள் மற்றும் நல உதவிகளை. வழங்கினார். நிகழ்வில் பகுதி கழக நிர்வாகிகள் கே.பாலசுந்தரம், சி.வேலுமணி, பி.அண்ணாதுரை, பாபு வெங்கடேஷ், மீனாட்சி சுந்தரம், தொமுச கோபால், எம்.பாலன், பி.பிரகாஷ், எல்.ஹரிஹரன், என்.வி.பூபாலன், ஏ.செந்தில்குமார், எம்.தங்கவேல், சுல்தான், பி.ஆறுமுகம், கே.டி.அழகர்சாமி , ரங்கதுரை, நிர்மலா, மகேஸ்வரி, ஷர்மிளா, சரண்யா, ஜன்னத் துநிஷா, லட்சுமி கதிரவன், அண்ணாதுரை, ரவி, லோகநாதன், சின்னசாமி, சுப்ரமணியம், சீனிவாசன், மணிகண்டன், பிரசன்னா, ஜாகிர் உசேன் , வெள்ளியங்கிரி, ஜான் பாஷா, பன்னீர்செல்வம், லியாகத்தலி, சிட்டிபாபு உள்ளிட்ட கழக நிர்வாகிகள், சார்பு அணிகளின் நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலக கூட்டரங்கில் உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன் தலைமையில் அனைத்துத் துறை அலுவலர்களுடன் வளர்ச்சிப் பணிகள் முன்னேற்றம் குறித்து ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. மாவட்ட ஆட்சித்தலைவர் பா.பிரியங்கா பங்கஜம், தஞ்சாவூர் நாடாளுமன்ற உறுப்பினர் ச.முரசொலி, சட்டமன்ற உறுப்பினர்கள் துரை சந்திரசேகரன், டி.கே.ஜி.நீலமேகம், கா.அண்ணாதுரை, மாநகராட்சி மேயர்கள் சண்.இராமநாதன், க.சரவணன், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஆஷிஷ் ராவத், மாவட்ட வருவாய் அலுவலர் தெ. தியாகராஜன், மாவட்ட ஊராட்சித்தலைவர் உஷாபுண்ணியமூர்த்தி, துணை மேயர் மரு.அஞ்சுகம்பூபதி, ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் முனைவர் மு.பாலகணேஷ் மற்றும் பலர் உடன் உள்ளனர்.